
## தேர்ச்சி – இரண்டு :– கிறிஸ்துக்குள் புதுவாழ்வு வழங்கும் அருளடையாளங்களைப் பெறுவர்

9

### 2.1 புதுவாழ்வின் அருளடையாளங்கள்



1. இவர் யார்?
2. இவரது பணி என்ன?

✡ இவர் திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் ஆவார். இவர் இன்று கத்தோலிக்க திருச்சபையின் கண்காணும் தலைவராக இருக்கிறார்.

✡ கிறிஸ்து இயேசுவே கத்தோலிக்க திருச்சபையை நிறுவினார்.

✡ தூய பேதுருவை கத்தோலிக்க திருச்சபையின் தலைவராக கிறிஸ்து இயேசுவே நியமித்தார்.


**. . . உன் பெயர் பேதுரு; இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். . .**
**(மத். 16:18)**

இதன் வழியாக திருச்சபையின் மக்களை விசுவாசத்தில் வளர்க்கவும் வழிநடத்தவும் வேண்டிய அதிகாரத்தை கிறிஸ்து பேதுருவுக்குக் கொடுத்தார்.

**வாசிக்கவும் :**

யோவான் 21:15–17

திருமுழுக்கு என்னும் அருளடையாளத்தின் மூலம் நாம் திருச்சபையின் உறுப்பினராகிறோம்.




- மக்களுக்கு நற்செய்தியை அறிவித்தல்.
- அருட்சாதனங்களை வழங்குதல்.
- மக்களை மீட்பின் பாதையில் வழிநடத்துதல்.
- மக்களை விசுவாசத்தில் வளர்த்தல்.
- முழு மனித விடுதலைக்காக உழைத்தல்.

**நீங்களும் உங்கள் பங்கின் பணிகளில் உதவலாம்.**

- பாலர் சபை.
- பீடப்பணியாளர்.

## இயேசுவுக்கும் நிக்கதேமுவுக்கும் இடையில் நடந்த உரையாடல் (யோவான் 3:1-8)

- மாணவர் இருவர் முன்வந்து பின்வரும் விவிலியப் பகுதியை சத்தமாக வாசிப்பர்.

பரிசேயர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் நிக்கதேம். அவர் யூதத் தலைவர்களுள் ஒருவர். அவர் ஓர் இரவில் இயேசுவிடம் வந்து

**நிக்கதேம்** : ரபி, நீர் கடவுளிடமிருந்து வந்த போதகர் என்பதை நாங்கள் அறிவோம். கடவுள் தம்மோடு இருந்தாலன்றி, நீர் செய்யும் இவ்வரும் அடையாளங்களை யாரும் செய்ய இயலாது.

**இயேசு** : மறுபடியும் பிறந்தாலன்றி எவரும் இறையாட்சியைக் காண இயலாது என மிக உறுதியாக உமக்குச் சொல்லுகிறேன்.

**நிக்கதேம்** : வயதான பின் ஒருவர் எப்படிப் பிறக்க முடியும்? அவர் மீண்டும் தாயின் வயிற்றில் புகுந்து பிறக்க முடியுமா?

**இயேசு** : ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது என்று மிக உறுதியாக உமக்குச் சொல்கிறேன். மனிதரால் பிறப்பவர் மனித இயல்பை உடையவர். தூய ஆவியால் பிறப்பவர் தூய ஆவியின் இயல்பை உடையவர். நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று நான் உமக்குக் கூறியது பற்றி நீர் வியப்படைய வேண்டாம். காற்று விரும்பிய திசையில் வீசுகிறது. அதன் ஓசை உமக்குக் கேட்கிறது. ஆனால், அது எங்கிருந்து வருகிறது என்றும் எங்கு செல்கிறது என்றும் உமக்குத் தெரியாது. தூய ஆவியால் பிறந்த அனைவருக்கும் இது பொருந்தும்.

### பயிற்சி

- **பின்வருவன யாரால் யாருக்குக் கூறப்பட்டன?**

1. " இந்த பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன்."
2. " ஒருவன் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது."
3. " நீர் கடவுளிடமிருந்து வந்த போதகர் என்பதை நாம் அறிவோம்."

**திருமுழுக்கின் வழியாக நாம்**

- இறைவனுக்கு சொந்தமாகிறோம்.
- புதுவாழ்வு பெறுகிறோம்.
- இறைபணிக்கு அழைக்கப்படுகிறோம்.

**மக்களெல்லாரும் திருமுழுக்குப் பெறும் வேளையில் இயேசுவும் திருமுழுக்குப் பெற்று, இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தபோது வானம் திறந்தது. தூய ஆவி புறா வடிவில் தோன்றி அவர்மீது இறங்கியது. அப்பொழுது, "என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" என்று வானத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது.**

**(லூக். 3:21-22)**

"என் அன்பார்ந்த மகன் நீயே. உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்."

இயேசு, தந்தை தனக்களித்த மீட்புப் பணியை நிறைவேற்ற பொறுப்புடன் முன்வந்ததால் தந்தைக்கு உகந்தவரானார்.

திருமுழுக்குப் பணிவாழ்வை ஆரம்பிப்பதற்கு எமக்கு அழைப்புத் தரப்பட்டுள்ளது. அந்த அழைப்பினை நிறைவேற்றுவதனால் நாமும் அவருடைய அன்பார்ந்த பிள்ளைகளாகின்றோம்.

உறுதிப்பூசுதல் என்னும் அருளடையாளம் வழியாக எமக்குத் தரப்பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு தூய ஆவியின் அருள் வழங்கப்பட்டுள்ளது.

> **எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்.**
>
> **(மத் 28 : 19)**

மேற்கூறப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றும்போது இறைவனுடைய மகனாக, மகளாக மாறுகின்றோம்.

**செயற்றிட்டம் :**

- 7ம் தரத்தில் கற்கும் மாணவராகிய உமக்கு உள்ள பொறுப்புக்கள் எவை?

| வீட்டில் | பாடசாலையில் | பங்கில் |
|---|---|---|
| | | |

- திருமுழுக்கின் வழியாக இறைவனின் பிள்ளையானோம்.
- உறுதிப்பூசுதல் வழியாக இறைபிள்ளையாக பணிகளை செய்வதற்கான சக்தியையும் பலத்தையும் பெற்றுக்கொண்டோம்.

எனவே இறைபிள்ளைகளாக வாழவும்
பொறுப்புக்களை நிறைவேற்றவும்.
நற்கருணை எனும் ஆன்ம உணவு




- **ஊட்டம்**
- **சக்தி**
- **வளர்ச்சி**
- **பாதுகாப்பு**

தருகிறது



**இதை என் நினைவாகச் செய்யுங்கள்.**
**(லூக். 22:19)**

யூத கலாசாரத்திற்கேற்ப 'நினைவாகச் செய்தல்' என்பது 'மீண்டும் செய்தல்' ஆகும். நாம் திருப்பலி வழியாக இதனை நிறைவேற்றுகின்றோம்.

இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை நினைவுகூரும் முகமாக இதனை நிறைவேற்றினார். எனவே, இப்பாஸ்கா மறைநிகழ்ச்சியில் பங்குகொள்ளும் நாம் திருமுழுக்கினால் திருச்சபையில் அங்கத்துவ உரிமை பெறுகிறோம். இறை பிள்ளையாகிறோம். இதனால், மகிழ்ச்சியடைகிறோம்.

**என் வாழ்வில்...**

- இயேசு நற்கருணையில் முழு உடலோடும் ஆன்மாவோடும் பிரசன்னமாயிருக்கிறார் என்பதை ஏற்றுக்கொள்வேன்.
- தினந்தோறும் நற்கருணையை உட்கொள்வேன்.
- நற்கருணை வைக்கப்பட்டுள்ள இடங்களிலெல்லாம் பக்தியுடன் நடந்து கொள்வேன்.
- நற்கருணையில் உள்ள இயேசுவை அடிக்கடி சந்திப்பேன்.
- இயேசு என் உள்ளத்தில் வர தூய உள்ளத்தோடு வாழ்வேன்.

**"நற்கருணை உட்கொள்ளும்போது நாமும் கிறிஸ்துவும் ஒன்றாகிறோம்."**

**– புனித சிறில்**

